தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
GangaiammanKoil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone No.044-28389040, 044-28389043, E-mail: registrar@tnteu.ac.in
Website: www.tnteu.ac.in

No.TNTEU/R/DR-I/Circular/2022/03748 நாள்: 26.08.2022

முனைவர். மூ.சௌந்திரராஜன், பி.எச்.டி,
பதிவாளர் (பொ)

பெறுதல்

முதல்வர்கள்/நிர்வாகிகள்
அனைத்து இணைவுப்பெற்ற கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

ஐயா/அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள்: | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகள் - NCTE–யின் சுற்றறிக்கையின் படி கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக பணியாளர்களுக்கு வங்கி கணக்கின் வழியாக இணைய வழியில் மாத ஊதியம் வழங்கப்படுவதற்கான வங்கியிலிருந்து பெறப்பட்ட அறிக்கையினை (Bank Statement) - சமர்ப்பிப்பதற்கு மேலும் 15 நாட்கள் நீட்டித்து வழங்குதல் - தொடர்பாக. |
| பார்வை: | 1.NCTE –யின் சுற்றறிக்கை, கடித எண் : NCTE-Regi011/545/2022-Legal Section-SRC (133933-133964) Date: 10.08.2022.<br>2. இவ்வலுவலக கடித எண்.TNTEU/R.DR-1/Circular/2022/03613, Dated 11.08.2022.<br>3. ஆசிரியர் நியமனத்தகுதி குழு கூட்டம் நடைபெற்ற நாள்: 26.08.2022. |

*****

மேற்கண்ட இப்பல்கலைக்கழக கடிதம் (2) இல் குறிப்பிட்டுள்ளவாறு, தேசிய ஆசிரியர் கல்விக் குழும (NCTE) விதிப்படி கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக பணியாளர்களுக்கு வங்கி கணக்கின் வழியாக இணைய வழியில் மாத ஊதியம் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக, வங்கியிலிருந்து பெறப்பட்ட 3 மாதத்திற்கான சம்பள அறிக்கையினை 26.08.2022 – க்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இதனைத்தொடர்ந்து மேற்கண்ட விவரங்களை சமர்ப்பிப்பதற்கு கூடுதல் அவகாசம் கேட்டு பல்வேறு இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகளிடமிருந்து மின்னஞ்சல் மூலமாகவும் மற்றும் தபால்கள் மூலமாகவும் கடிதங்கள் பெறப்பட்டது.

எனவே, இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக பணியாளர்களுக்கான சம்பள அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு மேலும் 15 நாட்கள் நீட்டித்து வருகின்ற 15.09.2022- க்குள் பதிவாளர் முகவரிக்கு அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், 2022–23–ஆம் கல்வியாண்டிற்கு தொடர் இணைவிற்கு விண்ணப்பித்து, இணைவு ஆணைக்காக காத்திருக்கும் கல்லூரிகள், வங்கியிலிருந்து பெறப்பட்ட 3 மாதத்திற்கான சம்பள அறிக்கையினை சமர்ப்பித்தால் மட்டுமே தொடர் இணைவு ஆணை வழங்கப்படும் என்பதையும் மற்றும் மாணவர் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படும் எனவும் தெரிவிக்கலாகிறது.

பதிவாளர் (பொ)

Copy to:

1. Controller of Examination
2. Deputy Registrars
3. P.A to VC
4. Assistant Registrars
5. Affiliation Section
6. Notice Board
7. Staff qualification approval Committee

Kindly circulate to the staff members working under your control